# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590

**ஆணை நாள் – 04.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 10717/D/2019**

திரு. பொ. தாமரைச்செல்வன் --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டக்கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலகம், விழுப்புரம் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

பார்வை:

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 19.08.2019 |
| பொதுத் தகவல் அலுவலர் பதில் அளித்த நாள் | 01.10.2019 |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 25.09.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 22.10.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை செய்ய இயலாததால், இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மனுதாரர் திரு. பொ. தாமரைச்செல்வன் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திரு. G.கிருஷ்ணன், மாவட்டக்கல்வி அலுவலர், மாவட்டக்கல்வி அலுவலகம், விழுப்புரம் மாவட்டம் இன்றைய தொலைபேசி விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் விழுப்புரம் மாவட்டக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில், விழுப்புரம் மாவட்டம், காணை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட காணை வட்டார வளமையத்தின் (BRC) கட்டுப்பாட்டில் அமைந்துள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் தொடர்பான விவரம், தமிழக அரசின் தொடக்க, நடுநிலை, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் நிதி உதவிபெறும் பள்ளிகள், மாணவர் நலன் மற்றும் பள்ளி வளர்ச்சிக்காக அமைக்கப்பட்டு தற்பொழுது செயல்பட்டுவரும் அனைத்து விதமான குழுக்களின் விவரம், இப்பள்ளிகளில் செயல்படும் பள்ளி மேலாண்மைக்குழு (SMC)க்கு BRC

மூலம் கடந்த 2017-2018 மற்றும் 2018-2019 கல்வி ஆண்டுகளில் பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட நிதி விவரம், பள்ளியின் வளர்ச்சி மற்றும் இதர செலவினங்களுக்கு எந்தெந்த திட்டத்தின்கீழ் அரசின் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற விவரம் உள்ளிட்ட விவரங்களை மொத்தம் 6 இனங்களில் தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் மேற்குறிப்பிட்டவாறு தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(1) மற்றும் 19(3)-ன் கீழான தனது முதல் மற்றும் இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளார். மனுதாரரின் இரண்டாவது மேல்முறையீட்டு மனு இன்று (04.11.2020) தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், 01.10.2019 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு ஏற்கனவே தகவல்கள் வழங்கப்பட்டதாக தெரிவித்தார். விசாரணையில் பங்கேற்ற மனுதாரர், இம்மனு தொடர்பாக தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கப்படவில்லை என்றும், மேலும், மற்றொரு மனு தொடர்பாக, விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரிடம் விண்ணப்பித்த தகவல்களான பனமலைப்பேட்டை அரசு மேல்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வரும் முதுகலை விலங்கியல் ஆசிரியர் ஒருவர், தனியார் பள்ளிக்கு சாதகமாக செயல்பட்டு வருவதாகவும், அரசு பள்ளிக்கு வெளியே தனியார் பள்ளியின் பெயர் பலகை வைத்து விளம்பரம் செய்வதாகவும், அப்பெயர் பலகையை அகற்றுவது சம்பந்தமாக உரிய நடவடிக்கை மேற்கொண்டு, எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரங்களை தனக்கு தகவல்களாக பெற்று வழங்குமாறும் விசாரணையில் தெரிவித்தார்.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவில் கோரியுள்ள தகவல்கள் மற்றும் விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலரிடம் விண்ணப்பித்த தகவல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தினை மனுதாரருக்கு வழங்க விழுப்புரம் மாவட்டக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது. மேலும், மனுதாரர், விழுப்புரம் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கு விண்ணபித்த மனு இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 10717/D/2019</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டக்கல்வி அலுவலர்,
மாவட்டக் கல்வி அலுவலகம்,
விழுப்புரம் மாவட்டம். (இ)

**<u>மனுதாரர்:-</u>**

திரு. பொ. தாமரைச்செல்வன், த/பெ. பொய்யாமொழி,
எண்.1/267, நேதாஜி தெரு,
அன்னியூர் கிராமம் மற்றும் அஞ்சல்,
விக்கிரவாண்டி வட்டம்,
விழுப்புரம் மாவட்டம் - 605 202.

Copy to: File
SNPA 10.11.2020